சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை –கல்வி – பள்ளிகள் – மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட 2014–15ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்பு – 2014–15ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்கு சுகாதாரக் குட்டைத் தகளிகள் (Napkin Burners) வழங்குதல் – நிதி ஒப்பளிப்பு – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந. 2) துறை

அரசு ஆணை (நிலை) எண்: 103

நாள் : 30.12.2014
ஜய–மார்கழி 15, திருவள்ளுவர் ஆண்டு 2045.
படிக்கப்பட்டது:-

ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடித எண். க3/21131/2014
நாள் 04.08.2014.

******

ஆணை :

2014–15ஆம் ஆண்டிற்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு அமைச்சர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அவர்களால் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் 110 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 75 மேல்நிலைப் பள்ளிகளில் 32111 மாணவியர் பயின்று வருகின்றனர். இப்பள்ளி மாணவியரின் சுகாதார நலனை பாதுகாக்கும் வகையில் ஒரு பள்ளிக்கு ஒரு சுகாதாரக் குட்டைத் தகளி ரூ.25,000/– மதிப்பில் 185 ஆதிதிராவிட நல பள்ளிகளுக்கு ரூ.46.25 இலட்சம் செலவில் வழங்கப்படும்".

2. மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்களால் அனுப்பப்பட்ட கருத்துருவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் 110 ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 83 ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகள், மாநிலம் முழுவதும் இயங்கி வருகின்றன என்றும், இதில் 110 ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 75 ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகளில் பயின்று வரும் மாணவியரின் உடல்நலத்தைப் பேணவும், பள்ளியின் சுற்றுப்புறம் சுத்தமாகவும், சுகாதாரமாக இருக்கவும், மாணவிகளுக்கு ஏற்படும் பல்வேறு வகையான நோய்களிலிருந்து பாதுகாக்கவும், மேற்குறிப்பிட்ட ஆதிதிராவிடர் நல மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு, சுகாதாரக் குட்டைத் தகளிகள் (Napkin Burners) வாங்கி வழங்குவது மிகவும் அத்தியாவசியமானதாகும் எனவும், எனவே, 75 ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகளுக்கும் 110 ஆதிதிராவிடர் நல உயர்நிலை பள்ளிகளுக்கும், ஒரு பள்ளிக்கு ஒரு சுகாதாரக் குட்டைத் தகளி (Napkin Burner) வீதம் 185 சுகாதாரக் குட்டைத் தகளிகள் (Napkin Burners) வாங்கி வழங்கிடத் தேவைப்படும் ரூ.46.25 இலட்சம் நிதியினை ஒப்பளிப்பு செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

3. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, ஏற்று, 2014–15ஆம் ஆண்டில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் செயல்படும், 110 ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 75 ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகளுக்கு, ரூ.25,000/– மதிப்பீட்டில், ஒரு பள்ளிக்கு ஒரு சுகாதாரக் குட்டைத் தகளி வீதம் 185 சுகாதாரக் குட்டைத் தகளிகள் (Napkin Burnesr) வாங்கி வழங்கிட ரூ.46,25,000/-- (ரூபாய் நாற்பத்தாறு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்) கீழ் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்களுக்குட்பட்டு நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

(i) இத்திட்டத்திற்கென வாங்கப்பட வேண்டிய சுகாதாரக் குட்டைத் தகளிகளை (Napkin Burners) தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்த புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000–ன்படி விதிகளை அனுசரித்து வாங்க வேண்டும்

(மற்றும்)

(ii) அந்நிறுவனத்தால் நிர்ணயிக்கப்படும் விலை தோராய விலைக்கு கூடுதலாக இருக்கும் பட்சத்தில் நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப சுகாதாரக் குட்டைத் தகளிகளை கொள்முதல் செய்யவும், அதே சமயத்தில் விலை குறைவாக இருக்கும் பட்சத்தில், அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையில் அவற்றினை வாங்கிவிட்டு மீதித் தொகையை அரசுக்கு சரண் செய்தல் வேண்டும்.

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் –01 -- ஆதிதிராவிடர் நலன் – 277 கல்வி -1 திட்டத்தில் சேராதது –AA பள்ளிக்கல்வி --19 இயந்திரமும் சாதனமும், 01 வாங்குதல்.

(து.தொ.கு. 2225 01 277 AA 1919)

5. இது ஒரு "புதுப்பணி" குறித்த செலவினமாகும். நாளடைவில் இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி முதற்கண் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படும். இதற்கான முன் பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு – செலவு பொது – I) துறையால் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து செலவு செய்ய தேவையான தொகைக்கு செயற்குறிப்பினை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வரவு – செலவு பொது – 1) துறைக்கு விண்ணப்பிக்கும்படி, ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப் படுகிறார். மேலும் 2014–2015ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கைக்கான உரிய விளக்கக் குறிப்பினை நிதி (வரவு – செலவு பொது –1) துறைக்கு அனுப்பி வைக்கும்படி ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையை இயக்குநர் ஆதிதிராவிடர் நலம் அவர்கள் பெற்று பத்தி 3 (i) மற்றும் (ii)-ல் தெரிவித்துள்ள நிபந்தனைகள் மற்றும் நடைமுறையில் உள்ள விதிமுறைகளைப் பின்பற்றி சுகாதாரக் குட்டைத் தகளிகளை வாங்கி சம்பந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் மூலமாக அவற்றை பகிர்ந்தளிக்க அதிகாரம் அளிக்கப்படுகிறது.

7. மேலே பத்தி 3ல் குறிப்பிடப்பட்டுள்ள 185 சுகாதாரக் குட்டைத் தகளிகள் வாங்கி வழங்கப்பட்ட பின்னர், உரிய அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் இசைவினை அதன் அலுவல் சாரா குறிப்பு எண்.71132/நிதி (ஆதி (ம) பந ) துறை நாள் 29.12.2014 மற்றும் கூடுதல் நிதிபொதுக்கப் பேரேட்டு எண்.1987 (ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தேழு) ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கண்ணகி பாக்கியநாதன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை– 600 005.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
மாநில முதன்மை கணக்காய்வு தலைவர், சென்னை–600 018.
மாநில கணக்காய்வுத் தலைவர் – 35/6.
சம்பள கணக்கு அலுவலர் – 5/35.

நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–600 009.
மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நலத்துறை அவர்களின் சிறப்பு
நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் அவர்களின்
தனிச்செயலர், சென்னை–600 009.
நிதி (ஆதி (ம) பந) / (வ.செ.பொ.II, வ.செ.பொ.I) துறை, சென்னை–600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (அநமு.1,
ஆதிந.7, ஆதிந.5) துறை, சென்னை–600 009.
உதிரி/இருப்பு கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.